**செய்தி வெளியீடு எண்: 570** **நாள்:05.08.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

01.01.2022–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்க்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது.

| வரிசை எண் | செயல்பாடு | காலவரையரை |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு. | 01.11.2021 (திங்கட்கிழமை) |
| 2. | ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் சமர்ப்பிப்பதற்கான காலவரைகள். | 01.11.2021 (திங்கட்கிழமை) முதல் 30.11.2021 (செவ்வாய் கிழமை) |
| 3. | ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் மீது நடவடிக்கை எடுத்தல். | 20.12.2021 (திங்கட்கிழமை) |
| 4. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு | 05.01.2022. (புதன் கிழமை) |

2. ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் காலத்தின் போது, அதாவது 01.11.2021 முதல் 30.11.2021 வரையிலான சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2022, ஒரு வாக்காளர் அல்லது ஒரு தகுதியுள்ள குடிமகன் தனது பெயரை பதிவு செய்யவோ அல்லது நீக்கம் / திருத்தம் / இடமாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ள படிவம் 6,7,8, அல்லது 8ஏ–ஐ கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கலாம்:-

(i).ஏதேனும் அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்/ வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் அளிக்கலாம்.

(ii). சம்மந்தப்பட்ட வாக்குச் சாவடி நிலையங்களில் நடக்கும் சிறப்பு முகாம் நாட்களில் வாக்குச் சாவடி நிலைய அலுவலர்களிடம் அளிக்கலாம் (சிறப்பு முகாம் தேதிகள் பின்னர் தெரிவிக்கப்படும்)

(iii). அலுவலக நாட்களில் சிறப்பு சுருக்கமுறை திருத்த ஏற்புரை மற்றும் மறுப்புரை காலங்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களிடம் வழங்கலாம்.

3. பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்திய கடவுச் சீட்டு / ஓட்டுநர் உரிமம் / குடும்ப அட்டை / சமீபத்திய குடிநீர் / தொலைபேசி / மின்சாரம் / சமையல் எரிவாயு இணைப்பு ரசீது / வங்கி / கிஸான்/ அஞ்சல் அலுவலக சமீபத்திய கணக்கு புத்தகம் ஆகிய ஏதேனும் ஒன்றின் நகலை முகவரிச் சான்றாக சமர்ப்பிக்கலாம். வயது சான்றாக, பிறப்புச் சான்றிதழின் நகல் / பள்ளி நிறைவுச் சான்றிதழின் நகல் ஆகியன சமர்ப்பிக்கலாம். மனுதாரர் 25 வயதுக்குட்பட்டவரெனில் வயதுச் சான்று கட்டாயமாகும். www.nvsp.in என்ற இணையதள முகவரி மற்றும் “வாக்காளர் உதவி” கைபேசி செயலி (VOTER HELP LINE Mobile App) ஆகிய ஆன்லைன் முறையின் மூலமும் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

4. 01.01.2022 அன்று 18 வயது நிறைவடைந்தவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்திலுள்ள உறுதிமொழியினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

5. ஒரு வாக்காளரின் பெயர் ஏற்கனவே பட்டியலில் இருந்தால், ஆனால் அவர்/அவள் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தொலைந்து போதல்/ இடம் தவறவிடல் ஆகிய காரணங்களுக்காக, பின்பு அவன்/அவள் எந்த நேரத்திலும் வட்டாட்சியர்/ மண்டல அலுவலகத்தில் படிவம் 001–ல் விண்ணப்பிக்கலாம்.

6. வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்பட வேண்டும் அல்லது வாக்காளர் பதிவு அதிகாரிக்கு தபாலிலும் படிவத்தை அனுப்பலாம். வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்படும்போது அதனுடன் கூட விண்ணப்பதாரரின் புகைப்படம், ஏனைய பிற விவரங்களுடன் விசாவின் செயல்திறன் பற்றிய மேற்குறிப்பு அடங்கிய கடவுசீட்டின் தொடர்புடைய பக்கங்களின் ஒளிநகலையும் சேர்த்து அளிக்கவேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரி மூல கடவுசீட்டினை ஒப்பிட்டுச் சரிபார்த்து உடனடியாக திரும்பக் கொடுத்துவிடுவார். படிவம் 6A தபாலில் அனுப்பப்படும்போது, கடவுசீட்டின் ஒளிநகல்கள் சுய சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**